REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: கார்த்திகை 7உ திங்கள் (22—11—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 8உ செவ்வாய் (23—11—54) [இதழ் 138

## வேற்றுமை நீங்கிற்று!

இந்திய ரயில் நிலையங்களில் உள்ள பிரயாணிகள் தங்கும் விடுதியில், அதற்கென்று உள்ள கட்டணம் செலுத்துவோர் அனைவரையும் அனுமதிப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இதுவரையில், புகை வண்டிகளில் உயர் வகுப்புகளில் பிரயாணம் செய்பவர்களுக்கே அவை பயன்பட்டு வந்தன. சாதாரண வகுப்புகளில் செல்வோர் இந்த விடுதிகளில் அனுமதிக்கப்படாமலிருந்தார்கள்.

உடனே, இதுபோன்ற வேற்றுமைகள் நீக்கப்பட வேண்டுமென்று ரயில்வே போர்டு உத்தரவிட்டிருக்கிறது.

# 'சிவகாமியின் சபதம்' தமிழ் நாடகக் கலையை பிரதிபலிப்பது அல்ல!

## டில்லிக்குக் கண்டனம் அனுப்புங்கள்

## தெ. இ. நடிகர் சங்கம் வேண்டுகோள்

### தேசீய நாடக விழா: முடிவு எதேச்சாதிகாரமானது

### "தமிழ்நாட்டின் மானம் காக்க எழுவீர்" என்று கோரிக்கை

"சென்னை பிரதேச நாடக விழாவில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாடகம், தமிழ் நாடகக் கலையின் உயர்வைப் பிரதிபலிப்பது அல்ல; தேசீய நாடக விழாவிற்காக, தமிழ் நாட்டின் சார்பில் அந்நாடகம் தேர்ந்தெடுக்கப்பட்டது, 'எதேச்சாதிகாரத்'தின் விளைவாகும்,"

—என்று, தென் இந்திய நடிகர் சங்கம் கூறி, இதுபற்றி தமிழ்ப் பெருமக்கள் தங்கள் கண்டனத்தை டில்லிக்கு அனுப்ப வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

தென்னிந்திய நடிகர் சங்கச் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அவ்வறிக்கையில் காணப்படுவதாவது:-

"டில்லியில் நடைபெறும் தேசிய நாடக விழாவில், தமிழ்க் கலைஞர்கள் கலந்து கொள்ள முடியாத நிலைமையை உருவாக்கி நடைபெற்ற இந்தப் 'போலி' நாடக விழாவைத் தடுத்து, தமிழ் நாடகக் கலையின் கௌரவத்தைக் காப்பாற்ற நாங்கள் எவ்வளவோ முயன்றோம்; அறிக்கைகள் விடுத்தோம்; அதிகாரபூர்வமாக வாதாடினோம்; பலன் இல்லை; தமிழ் நாடக விழாவை 'நாடக'மாகவே நடத்தி முடித்துவிட்டார்கள்."

அது மேலும் கூறுவதாவது:—

"இந்தியாவிலேயே இன்று நாடகக் கலை வளர்ச்சியில் முன்னணியில் நிற்கும் நமது தமிழ் நாட்டிலிருந்து, கிருபா அமைச்சூர் குழுவினர் நடித்த 'சிவகாமியின் சபதம்,' சிறந்த நாடகம் என்று டில்லி தேசீய நாடக விழாவுக்கு அனுப்பப்படுகிறது.

ஆங்கிலேயர் அரசாண்ட காலத்தில், அடிமை நாட்டில், அரும்பாடுபட்டுக் காலமெல்லாம் தமிழ் நாடகக் கலை உயர்வுக்காக உழைத்த உத்தமப் பெரியார்களையும், கலைஞர்களையும் புறக்கணித்துவிட்டு, சுதந்திரத் திருநாட்டில், சர்க்கார் ஆதரவு, வெளிநாடுகளுடன் கலாசார உறவு, உபகாரச் சம்பளம், பரிசு என்ற பெயர்கள் அடிபடும் காலத்தில், கலையின் பெயரால் புல்லுருவிகள் தோன்றி, இடம் பிடித்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள்.

"இந்த முடிவு, தமிழ்க் கலைஞர்களை மட்டும் பாதிப்பது அல்ல; வளர்ந்து நிற்கும் தமிழ் நாடகக் கலையின் மானத்தையும், தமிழ் நாட்டையும் பாதிப்பதாகும்.

"இந்த நிலையில், தமிழ் நாட்டின் ஒன்றுபட்ட கண்டனக் குரல் எழும்பாவிட்டால், 'இதுதான் தமிழ் நாடகத்தின் தரம்' என்று, டில்லியிலே முடிவாகிவிடும்."

இவ்வாறு குறிப்பிடும் தென் இந்திய நடிகர்கள் சங்கத்தின் அறிக்கை, தமிழ் நாட்டுப் பொது மக்களைக் கேட்டுக்கொள்வதாவது:-

"எனவே, நகரசபைகள், மாவட்டக் கழகங்கள், நாடக சபைகள், பொதுநலச் சங்கங்கள், பத்திரிகை

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆசைத்தம்பி கூட்டத்தில் வெடிகுண்டு வீச்சு

### ஒருவர் கைது; இருவருக்குப் பலத்த காயம்

கொழும்பு தி. மு. க. கூட்டத்தில் அநாகரிகச் செயல்

சென்ற 7—11—54 மாலை, கொழும்பு நாராயண குரு மண்டபத்தில் நடைபெற்ற கொழும்பு தி. மு. கழகக் கூட்டத்தில், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி பேசுகையில், [illegible]ரோ சில காலிகள் மேடை மீது கை வெடிகுண்டு ஒன்றை வீசினர். கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த மண்டபத்திற்கு வெளியிலும் இதேபோல் ஒரு கை வெடிகுண்டு வீசப்பட்டது.

வெளியில் சிலர், மக்கள் மீது கற்களை வீசி எறிந்தனர் என்றும், இதனால் இருவருக்குப் பலத்த காயமும், மற்றும் பலருக்கு சிறு காயங்களும் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

இச்சம்பவம் காரணமாகப் போலீசார் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர் எனப்படும் ஒரு நபரைக் கைது செய்து அழைத்துச் சென்றனர். (4-ம் பக்கம் பார்க்க)

## கல்கத்தாவில் 10,500 'ரௌடி'கள் வளைக்கப்பட்டனர்

### குற்றம் புரிவோரில் பல ரகம்!

குற்றம் குறைய போலீசார் மேற்கொள்ளும் புது முறை

கல்கத்தா நகர போலீசார் கடந்த 4 மாதங்களில் 10,500 குண்டர்களையும், 'ரௌடி'களையும் வளைத்துப் பிடித்து, அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் என செய்தி வெளிவந்துள்ளது.

இந்தியாவிலேயே கல்கத்தா நகரில்தான், இந்த 'ரௌடி'கள் தொகை பெருகிக் கொண்டு வருகிறதாம்.

1946-ல் நடைபெற்ற கலவரத்திற்குப் பின், கல்கத்தாவில் குற்றம் புரிவோர் தொகை வளர்ச்சியடைந்து வந்துள்ளது என்றும், இன்றுள்ள நிலையில், அமெரிக்காவில் சிகாகோவில் காணப்படும் 'ரௌடி'களின் எண்ணிக்கையையும் கூட மிஞ்சி விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாம்.

கடந்த நான்கு மாதங்களுக்கு முன் கல்கத்தா போலீசார், இந்த 'ரௌடி'களின் நடமாட்டம் கல்கத்தா வீதிகளில் இனி இருக்க அனுமதியோம் என சூளுரைத்துச் செயலில் ஈடுபட்டனர்.

ஒரு உயர்தர டிபுடி கமிஷனர் அந்தஸ்துள்ள போலீஸ் அதிகாரி, இந்த 'ரௌடி' ஒழிப்பு வேலையைத் தலைமையேற்று நடத்துமாறு பணிக்கப்பட்டிருந்தார்.

எஸ். என். முகர்ஜி என்ற அதிகாரியின் தலைமையில் கடந்த நான்கு மாதங்களாகத் தொடர்ந்து வேலையிலீடுபட்டு வந்தனர்.

இப்போது கிடைத்துள்ள தகவலின்படி தினசரி சராசரியாக 150 முதல் 175 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

வளர்ந்து வரும் இந்த நிலை குறித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது கட்டாயமான ஒன்றாகும் என்று மாநில அரசாங்கத்துக்கு போலீசார் தெரிவித்துள்ளனர் எனத் தெரிகிறது.

இப்போதுள்ள சட்டங்கள், குற்றம் புரிவதையே தொழிலாகக் கொண்டவர் மீது நடவடிக்கை எடுக்கப் போதுமானதல்ல என்று போலீசார் கருதுகின்றனராம்.

'ரௌடி' வேலையை புதியதாக ஆரம்பிப்பவர்களுக்கு வேலை கொடுப்பதின் மூலம் அவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும் போலீசார் முயன்று வருகின்றனர் எனத் தெரிகிறது.

இந்த முயற்சி, எதிர்பாராத விதமாக பெரும் வெற்றி தந்திருப்பதாக அதிகாரி அறிவித்துள்ளாராம்.

குற்றம் புரிவதைத் தொழிலாகக் கொள்ளாதவர்கள் ஒருமுறை எச்சரிக்கை செய்யப்பட்டால், பின் திரும்பவும் குற்றம் புரிவதில்லை என போலீசார் கண்டுள்ளனர் எனத் தெரிகிறது.

சுமார் 40 வர்த்தகக் கம்பெனிகள் மேற்கண்ட 'ரக'க் குற்றவாளிகளுக்கு வேலை தந்து போலீசாருடன் ஒத்துழைக்கச் சம்மதித்துள்ளனவாம்.

போலீசார் கருத்துப்படி, இந்தக் கம்பெனிகளில் வேலை செய்யத் துவங்கிய அந்தக் குற்றவாளிகள் முழுவதும் மாறிவிட்டதாகவும் ஒழுங்காக நடந்து வருவதாகவும் சொல்லப்படுகிறது.

குற்றம் புரிவதைத் தொழிலாகக் கொள்ளாத குற்றவாளிகள் பலர் வங்காளிகளாம். அவர்கள் எல்லோரும் மத்தியதர வர்க்கத்தினரைச் சேர்ந்தவர்களாம். இவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதில் சற்று அனுதாப உள்ளம் இருக்க வேண்டுமெனவும், போலீசார் கருதுகின்றனர்.

## கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து தினம் 300 பேர் ஓடி வருகின்றனர்

### அந்த 'அகதி'களுக்கு ரூ. 185 கோடி நஷ்டஈடு

மத்திய மந்திரி தரும் தகவல்!

மேற்கு பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்து இந்தியாவிற்கு ஓடிவந்துள்ள எல்லா 'ரக' அகதிகளுக்கும், இன்னும் மூன்றாண்டுகளுக்குள் நஷ்டஈடு தரப்படும் என்று இந்தியப் பேரரசின் அகதிகள் புனரமைப்பு இலாகா அமைச்சர் அஜீத் பிரசாத் ஜெயின் குறிப்பிட்டிருக்கிறார்.

இன்னமும் தினம் தினம் சராசரியாக கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து மேற்கு வங்கத்திற்கு சுமார் 300 பேர் வீதம் அகதிகள் என்ற பெயரில் ஓடிவந்து கொண்டிருக்கிறார்கள் என்ற தகவலையும் அவர் தந்திருக்கிறார்.

இன்னும் நான்கு மாத காலத்திற்குள் அந்த அகதிகள் தங்களது நஷ்டஈடு கோரிக்கைக்கான மனுக்களை அனுப்பித் தரக் கோரப்படுவார்களாம், இந்திய அரசாங்கத்தால்.

இந்தக் கோரிக்கைகள் சுமார் 500 கோடி ரூபாய்க்கு வரலாம் எனத் தெரிகிறதாம்.

185 கோடி ரூபாய், மூன்றாண்டுக்குள் அந்த அகதிகளுக்கு நஷ்டஈடாகத் தரப்பட்டுவிடும் எனவும் மந்திரி குறிப்பிட்டிருக்கிறார்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

## காமராசர் பேசுகிறார்!

"தமிழ் மொழி ஆட்சி மொழியாக வேண்டுமானால், ஆங்கிலத்தில் உள்ள அத்தனை சொற்களும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டாக வேண்டும். அப்போது தான் அது சாத்தியமாகும்."

என்று, முதன் மந்திரி காமராசர் மதுரையில் ஊழியர் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

## எகிப்திற்கு புதிய ஜனாதிபதி?

எகிப்திய ஜனாதிபதி பதவியிலிருந்து ஜெனரல் நகீப் விலக்கப்பட்டதைத் தொடர்ந்து 81 வயதுடையவரும், பிரபல இலக்கிய ஆசிரியரும், அரசியல் விவேகியுமான மகம்மது லுத்வி எல்ஸயீத் என்பவரை ஜனாதிபதியாக இருக்குமாறு எகிப்திய புரட்சிக் கவுன்சில் கேட்டுக்கொண்டுள்ளதாம்.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணுதுரை

சென்னை 22—11—1954 திங்கள்

# ஏகாதிபத்தியத்தின் எதிர்காலம்!

முதல் உலகப் பெரும் போரில் தொடங்கிய பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சி, இரண்டாம் பெரும் போரில் இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டது. இந்த உண்மையைத்தான் பிரான்சின் இப்பொழுதைய நடைமுறை அரசியல் உறுதி செய்வதாக இருக்கிறது.

இந்த வரலாற்று உண்மையை அந்த நாட்டு அரசியல் தலைவர்களும்—அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தபோதிலும், அறிந்தே இருக்கிறார்கள். இருந்தாலும், பழைய ஏகாதிபத்திய மோகம், அவர்களில் சிலரை, இன்னும் விட்டுத் தொலைவதாகக் காணேம். அந்த ஆதிக்கத் தொத்து நோயிலிருந்து, தங்களை விடுவித்துக் கொள்ளும் வழிவகைகளும் அவர்களுக்கு விளங்குவதாகக் காணேம். அவர்களில் சிலருக்கு, அதற்கான வழிவகைகள் விளக்கமாகத் தெரிந்தபோதிலும், ஏகாதிபத்திய நிலைமையிலிருந்து சாதாரண நிலைமைக்கு பிரான்சை மாற்றி அமைப்பதற்குத் தேவைப்படும் நெஞ்சுரம் இல்லாமல் இருக்கிறது. அத்தகு நெஞ்சுரம் உள்ள சிலரும், ஏகாதிபத்திய வெறியர்களின் எதிர்ப்பைத் தாங்கி, தங்கள் கருத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவது இயலாது போகுமே என அஞ்சுகின்றனர். அவ்வச்சத்தின் விளைவாக, அவர்களுக்குள்ள ஆற்றலும், அறிவும், நல்நோக்கமும் பிரான்சுக்கு நலம் செய்வதற்கு இல்லாமல் வீணுகின்றன.

இன்றுள்ள உலக நிலையில், பிரான்சின் வளமும் வன்மையும், மேலும் அந்நாட்டை என்றும்போல் ஒரு ஏகாதிபத்திய அரசாகக் காத்து வளர்த்துவர போதியதாகாது என்ற உண்மையை விளக்கமாகப் புரிந்துகொண்டிருக்கிற பிரெஞ்சு அரசியல்வாதிகளுக்குள், தலைசிறந்தவராக இருந்துவருபவர், பிரதம மந்திரி மெண்டே பிரான்ஸ் என்பவராவார். அவருடைய செயல் திறம், உலக வரலாற்றில் ஏற்கனவே இடம் பெற்றுவிட்டிருக்கிறது. அமெரிக்காவின் அச்சுறுத்தலுக்கும், சோவியத் ரஷ்யாவின் மிரட்டலுக்கும், சீனுவின் மறைமுக கெடுபிடிக்கும் கொஞ்சமும் சோர்ந்துவிடாமலும், மனமுடைந்துவிடாமலும், இந்தோ-சீனப் போரை ஒரு முடிவிற்குக் கொண்டுவந்ததும், பிரெஞ்சிந்தியாவிற்கு உரிமை வழங்கியதும் மெண்டே பிரான்சின் அரசியல் நுண்ணறிவிற்கும், செயல் திறத்திற்கும், உலகப் போக்கை உணர்ந்துள்ள உயர் மதிக்கும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

ஐரோப்பிய இராணுவக் கூட்டில் சேர மறுத்தும், ரஷ்யாவின் ஆசை மொழிக்கு மயங்கிவிடாமலும், எதிர்காலத்தில் தன் நாட்டை பாதுகாத்துக் கொள்ள, தன் விருப்பப்படி பிரிட்டனையும் அமெரிக்காவையும் பணியவைத்ததும், ஜெர்மன் சுதந்திரத்திற்கு ஏற்பாடு செய்ததும், மெண்டே பிரான்சின் நாடாளும் திறமைக்குச் சான்று பகருவதாகும்.

பிரான்சின் எதிர்கால நலன் என்ற கண்கொண்டு பார்ப்பதின் மூலம்தான் மெண்டே பிரான்சின், மேற்படி செயல்களில் மறைந்து கிடக்கும் உயர் உண்மைகளைப் புரிந்துகொள்ள முடியும்.

உலகில் இரு கூறுகளாகப் பிரிந்து கிடக்கும் எந்த ஒரு கூறின் கோணத்திலிருந்து நோக்கினுலும்கூட, மெண்டே பிரான்ஸ் புரிந்துள்ள பணிகள் மிகமிகக் குறைந்த அளவு குறைபாடு உடையதாகக் காணப்படுமேயல்லாது, அறவே கண்டித்து ஒதுக்கிவிடத்தக்கவையாக இருக்காது. ஒன்றை ஒன்று விழுங்கும் நினைப்பில் உருவாகும் பயங்கர அரசியல் சூழ்நிலையில், அந்நாட்டு நலனை முன்தள்ளி, ஒவ்வொரு சிக்கலிலும் வெற்றி காண்பது என்பது அரசியல்வாதிகள் அனைவராலும் முடியக்கூடியது அல்ல. ஆனுல், அத்தகைய கொந்தளிப்பான உலக அரசியல் போக்கினுல் உருவான, ஒவ்வொரு சிக்கலிலிருந்தும் மெண்டே பிரான்ஸ், பிரான்சின் தன்மானத்தையும் காப்பாற்றி, நலன்களையும் கூடுமானவரை பாதுகாத்து வந்திருக்கிறார் என்பதில் ஐயமில்லை.

உலக வல்லரசுகளின் உருட்டல் மிரட்டல்களும், ஆசை மொழியும் கனிவுரையும், பிரான்சுக்கு நல்லதோர் எதிர்காலத்தை உருவாக்கவேண்டும் என்ற மெண்டே பிரான்சின் குறிக்கோளை மாற்றுது தோற்றுப்போனதோடு மட்டுமல்லாமல், ஒவ்வொரு பிரச்சினையின் பொழுதும், எதிர்ப்பாக உள்நாட்டில், ஒரே காலத்தில் தீவிரவாதிகளிடமிருந்தும், கீழ்த்தரமான பிற்போக்காளர்களிடமிருந்தும் கிளம்பும் பெரும் தாக்குதலை முறியடித்து, தமது கருத்தில் வெற்றி தேடியதிலும் மெண்டே பிரான்ஸ் பாராட்டத்தக்க வெற்றியினைப் பெற்றிருக்கிறார்.

முதல் உலகப் பெரும் போருக்குப் பிறகு, மெண்டே பிரான்ஸ் முதல் மந்திரியாகப் பதவியிலமரும் வரை உள்ள இடைக்காலத்தில், அவர் பொறுப்பில் அமர்ந்த எவரும், அவர் போல் செயல் திறம் படைத்திருக்கவில்லை என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அந்த இடைக்காலத்தில் திட்டவட்டமான அரசியல் கொள்கைகளையும், இலட்சியங்களையும் கொண்ட பல அரசியல் தலைவர்கள், பிரான்சின் முதல் மந்திரி பீடத்தை அலங்கரித்து இருந்திருக்கிறார்கள். உலகத்தவர்களால், அவர்கள் நன்கு மதிக்கப்பட்டவர்களாகக்கூட இருந்துள்ளனர். இருந்தாலும், பிரெஞ்சு நாட்டு வரலாற்றில், தம் அரும் பணியால் குறிப்பிடத்தகுந்த ஒரு இடத்தை மெண்டே பிரான்ஸ் உண்டாக்கி இருப்பதுபோல், எந்த உலகப் புகழ் பெற்ற எவரும் உண்டாக்கினது கிடையாது. எனவே, பிரெஞ்சு ஏகாதிபத்தியம், தன்னுடைய ஏகாதிபத்திய உருவை மாற்றிக்கொண்டு, எதிர்காலத்தில் தனிப்பெரும் சுதந்திர நாடாகத் திகழ்ந்து வளத்துடன் வாழ்வதற்கான ஒரு அடிப்படையை அமைப்பதில், மெண்டே பிரான்ஸ் கணிசமான வெற்றி பெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது—பாராட்டத்தக்கது.

## தொழிலாளர்களுக்கு 2 அறை வீடுகள்

### நிபந்தனைகளில் தளர்வு

சர்க்கார் உதவியுடன், தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கான இந்திய சர்க்கார் திட்டத்தின் கீழ், தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும், சுரங்கத் தொழிலாளர்களுக்கும் கட்டிக் கொடுக்கப்படவிருக்கும் வீடுகளில், இரண்டு அறைகள் மட்டும் கொண்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை பற்றிய கட்டுப்பாடுகளை நீக்குவதெனவும், அம்மாதிரியான வீடுகளைக் கட்ட மேலும் அதிகப் பண உதவி செய்வதென்றும் மத்திய சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

மாதம் ஒன்றுக்கு ரூ. 150-க்குக் குறையாமலும், ரூ. 250—க்கு மேற்படாமலும் ஊதியம் பெறுபவர்களுக்குத்தான் அம்மாதிரி வீடுகள் ஒதுக்கப்பட வேண்டும் என்பதுதான் தற்சமயம் அமுலில் இருந்துவரும் திட்டத்தின் நோக்கம்.

ஆனுல், இப்போது, திருத்தப்பட்டுள்ள திட்டத்தின்படி, மாதம் ரூ. 350 வரை ஊதியம் பெறுகிறவர்களுக்கும் அம்மாதிரியான வீடுகள் ஒதுக்கப்படலாமாம்!

இம்மாதிரி வீடுகள் கட்டிக்கொள்ள நிதி உதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளும்படி, ஒவ்வொரு மாநில சர்க்கார்களையும், மத்திய சர்க்கார் அமைச்சர் காரியாலயம் கோரியுள்ளது.

## இஸ்லாமிய நாடு

### இஸ்கந்தர்மிர்ஜா கருத்துக்கு எதிர்ப்பு

மேஜர் ஜெனரல் இஸ்கந்தர் மிர்ஜா என்ற பாகிஸ்தானின் மந்திரி, 'பாகிஸ்தான் ஒரு இஸ்லாமிய நாடல்ல,' என்று கூறிவருகிருரல்லவா?

அவர் அப்படிப் பேசுவது பாகிஸ்தான் மக்களின் மத உணர்ச்சியைப் புண்படுத்துவதாக இருப்பதால், இனி அவர் அம்மாதிரி பேசாமலிருக்கச் செய்ய வேண்டுமெனக்கோரி சர்க்காரை வற்புறுத்தி, ஜமீயத் செயற் குழு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

இஸ்கந்தர் மிர்ஜா 'உருக்கு மனிதர்' எனக் கருதப்படுபவர்.

## இந்தியாவிற்குப் பர்மிய நோட்டுகள்

### கோண்டுவர அனுமதி

பர்மிய ரூபாய் நோட்டுகளை இந்தியாவிற்குக் கொண்டு வருவதற்குள்ள தடையை இந்திய அரசாங்கம் தளர்த்த முடிவு செய்திருப்பதாகச் செய்தி வெளியாகியுள்ளது. இதுபற்றி சீக்கிரமே அதிகாரபூர்வமான அறிவிப்பு வெளிவருமாம். இந்திய—பர்மிய எல்லையோரங்களில் நடைபெறும் வர்த்தகத்துக்கு உதவி புரிவதே இந்தக் கட்டுப்பாடு நீக்கத்தின் நோக்கமாம்.

## நோக்கம் அதுதானே!

கம்யூனிஸ்டுகளை 'எதிர்த்துப் போராடுவதற்கு' வியட்நாம் இராணுவத்தினருக்குப் பயிற்சியளிக்கும் பொறுப்பை அமெரிக்கா ஏற்றுக்கொண்டிருக்கிறதாம்!

## மருத்துவக் கல்வியின் தரம்

## குறைக்கும் ஏற்பாட்டிற்கு எதிர்ப்பு

### கிராமங்களில் பணிபுரியும் மருத்துவருக்கு அதிகச் சம்பளம் தருக!

#### டாக்டர் ஷங்கர் ராவ் ஜதாவ் கூறும் யோசனை

"அதிகமான மருத்துவர்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் மருத்துவக் கல்வியின் தரத்தைக் குறைக்கும் முயற்சியை மேற்கொள்ளும் மருத்துவரல்லாதாரின் போக்கைக் கண்டிக்கிறேன்;

"மருத்துவக் கல்வி கற்பதற்காக இப்போதுள்ள காலத்தைக் குறைப்பதை எதிக்கிறேன். மருத்துவக் கல்லூரிகளில் 'ஷிப்டு' முறை கையாளப்படக்கூடாது.

"கிராமங்களுக்கு மருத்துவர்கள் செல்ல வேண்டுமானுல் அவர்களுக்கு, நகரத்தில் பணிபுரியும் டாக்டர்களைக் காட்டிலும் அதிகமான சம்பளம் தரவேண்டும். அப்படியில்லாவிடில், எந்த மருத்துவரும் நகர்ப்புறத்தைவிட்டு கிராமங்களுக்குச் செல்ல விரும்பமாட்டார்கள்,"

—என்று உஸ்மானிய மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர் ஷங்கர் ராவ் ஜதாவ், ஐந்தாவது ஐதராபாத் மருத்துவ மாநாட்டிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டார்:—

"ஐதராபாத் அரசாங்கம் ரூ 18 லட்சம் செலவில், ஆயுர்வேத யூனுனி மருத்துவக் கல்லூரிகளை விரிவுபடுத்த திட்டமிட்டிருப்பதாக அறிகிறேன்.

"பட்டம் பெருத மருத்துவக் கல்வி பெற்றிருப்பவர்களுக்கு கட்டாயபாடமாக இந்திய மருத்துவ சாஸ்திரத்தைப் போதிக்கும் வகையில் ஒரு புதிய மருத்துவக் கல்லூரியையே அந்த ரூ. 18 லட்ச தொகையைக் கொண்டு கட்டியிருந்தால், நலமாயிருந்திருக்கும். ஒரு ஆராய்ச்சிக் கழகமும் ஏற்படுத்தியிருக்கலாம். ஐதராபாத் நகரில் ஒரு ஹோமியோபதி மருத்துவமனை எழுப்புவது பணத்திற்குக் கேடு பயப்பதாகும்."

## குறைந்தபட்ச ஊதியம்

நாடு முழுவதும் குறைந்தபட்ச ஊதியம் ரூ. 100 ஆக இருக்க வேண்டுமெனக் கோரி தீர்மானமொன்றை, அகில இந்திய தேசீய தொழிற் சங்கக் காங்கிரசின் பொதுக் குழு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

## ஆண்டொன்றுக்கு 3,000 லாரிகள்!

### டாடா கம்பெனி உற்பத்தி செய்யும்

ஜெர்மனியின் டைம்லெர் பென்ஜ் என்ற கம்பெனியுடன் டாடா கம்பெனியார் செய்துகொண்டுள்ள ஒப்பந்தப்படி, இந்தியாவில் ஆண்டொன்றுக்கு 3,000 - 'டிரக்'குகள் (லாரிகள்) உற்பத்தியாகுமாம்.

டாடா நகரில், அந்த ஜெர்மன் கம்பெனியுடன் டாடா கூட்டுச் சேர்ந்து ஆரம்பித்துள்ள 'டாடா—மென்ஸிடஸ் பென்ஜ் மோட்டார் தொழிற்சாலை'யில் அவை உற்பத்தியாகுமாம்.

இத்தகவலை அப்புதிய தொழிற்சாலையைப் பார்வையிட வந்துள்ள ஜெர்மன் கம்பெனியின் நிர்வாக போர்டு தலைவர் வெளியிட்டுள்ளார்.

அடுத்த ஐந்தாண்டுக்குள், நூற்றுக்கு நூறு இந்தியாவிலேயே தயாரான உபகரணங்களைக் கொண்டு டிரக்குகள் செய்யப்படுமென்றும்அவர் தெரிவித்திருக்கிறார்.

## அசாம் மாநில பொருளாதார நிலை

### அபிவிருத்தி செய்ய மத்திய அரசாங்க உதவி

அசாம் மாநிலத்தில் பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு மத்திய அரசாங்கம் கடனுகவும், மானியமாகவும் பெருந்தொகை பண உதவி செய்ய முன்வந்துள்ளது எனத் தெரிகிறது.

அசாமில் தரிப்பட்டவர்கள் பெரிய தொழில்களில் முதலீடு செய்ய முன்வர மறுக்கிறர்கள்; அதற்குக் காரணம், அங்கு ஒரு குறிப்பிட்ட அளவு 'மார்க்கெட்'தான் கிடைக்கிறது; அந்த மாநிலத் தேவைபோக அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிற பொருள்கள் வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதற்கான போக்குவரத்து வசதிகள் மிகக் குறைவு; மேலும், எல்லை மாகாணமாக அரசியல் ரீதியாக அமைந்திருக்கிற காரணத்தால், இந்தியாவின் வேறு பல மாநிலங்களில் முதலீடு செய்ய முன்வருபவர்கள்கூட இந்த மாநிலத்திற்கு வருவதில்லை.

இந்தக் காரணங்களால், அசாமின் பொருளாதார நிலைகள் முன்னேற புதிய தொழில்களின் அபிவிருத்திக்கு மாநில அரசாங்கம் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

அசாமின் மலைப்பாங்கான பூகோள நிலைகருதி, அதன் பொருளாதார வளர்ச்சிக்காக மத்திய அரசாங்கம் பெரும் தொகையாக கடனுதவியும், மானியமும் தர உத்தேசிக்கிறது எனத் தெரிகிறது.

அசாமில் காகிதத் தொழிற்சாலை மின்சார உற்பத்தி நிலயங்கள், சிமெண்டு, சர்க்கரை உற்பத்தி முதலிய தொழில்கள் துவங்குவதற்குத் தேவையான வளங்கள் ஏராளமாகின்றனவாம்.

## மத்திய பிரதேசத்தின்..

### 2-வது 5 ஆண்டுத் திட்ட விபரம்

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்காக மத்திய பிரதேச அரசாங்கம், 21 பெரியதும் சிறியதுமான நீர்ப்பாசனத் திட்டங்கள், பத்து மின்சாரத் திட்டங்கள் இவைகளைத் தயாரித்துள்ளதாம்.

இந்தத் திட்டங்களின் உத்தேச மதிப்பு மொத்தமாக ரூ. 104 கோடி எனத் தெரிகிறது.

இந்தத் திட்டங்கள் எல்லாம் மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலுக்கும், பண உதவிக்குமாக அனுப்பிவைக்கப்படுமெனத் தெரிகிறது.

இந்த பத்து மின்சாரத் திட்டங்கள் மூலமாயும் 1,80,000 கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியுமாம்.

நீர்ப்பாசனத்திற்காகத் தீட்டப்பட்டுள்ள 21 திட்டங்களும் நிறைவேற்றப்பட்டால் 29,22,600 ஏக்கர் நிலம் நீர்ப்பாசன வசதியைப் பெற்று செழிப்புறும் எனத் தகவல் தரப்படுகிறது.

# 'கைத்தறித் துணிகளையே அணிய வேண்டும்'

## எம். எல். ஏ.-க்களை அழைக்கக் கூடாதென்ற சர்க்கார் போக்கிற்குக் கண்டனம்

## ஜெயங்கொண்டான் என். ஜி. ஓ. ஊழியர் மாநாட்டு முடிவு

7—11—54 காலை, திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்டான் மாவட்ட மன்றப் பள்ளியில், திருச்சி மாவட்ட என். ஜி. ஓ.-க்களின் தாலுகா முதல் மாநாடு, சென்னை மாநில என். ஜி. ஓ.-க்களின் பொதுச் செயலாளர் தோழர் ஜி. வெங்கட்டரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தமது உரையில், என். ஜி. ஓ.-க்களின் சம்பளப் பிரச்சினையை அரசாங்கம் கவனிக்காதது மிக வருந்தத் தக்கதென்றும், தங்களுடைய கோரிக்கையைப் பெற எவ்வித போராட்டத்திற்கும், தியாகத்திற்கும் என். ஜி. ஓ.-க்கள் தயாராக இருக்க வேண்டுமென்றும் கூறினர்.

மேலும் அவர் தொடர்ந்து பேசியதாவது :—

"என். ஜி. ஓ.-க்களின் கூட்டங்களுக்கு சட்டசபை உறுப்பினர்களை அழைக்கக் கூடாது என்று அரசாங்கம் தடை செய்வது, ஜனநாயக அரசியல் நிர்ணய சட்டத்திற்கு முரணாக இருக்கிறது; அதை எதிர்த்து, நமது நிறுவனத்தின் மூலமாக ஒரு 'ரிட்' மனுவை கோர்ட்டில் தாக்கல் செய்ய நமது நிறுவனம் தயங்காது," என்றார்.

என். ஜி. ஓ.-க்களுக்கு நல்ல முறையில் மருத்துவ வசதி அளிப்பது குறித்து, அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பின்னர் என். ஜி. ஓ.-க்களின் சம்பளப் பிரச்சினை பற்றி முதலமைச்சர், தாம் கூறிய உறுதிமொழியின் மீது இதுவரையிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காதது கண்டு வருத்தம் தெரிவித்துக் கொண்டு, உடனடியாக அப்பிரச்சினை குறித்து ஆவன செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டும், என். ஜி. ஓ.-க்களுக்கு அளிக்கப்படும் உதவாக்கரை மருத்துவவசதியை நிறுத்திக் கொள்ளும்படி அரசியலாரைக் கேட்டுக் கொண்டும், கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் குறையைப் போக்க என். ஜி. ஓ.-க்கள் அனைவரும் கைத்தறித் துணிகளையே வாங்க வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### இளங்கோ சொற் பயிற்சிப் பகுதி

சென்னை திரு. வி. க. இலக்கிய மன்றத்தைச் சார்ந்த இளங்கோ சொற்பயிற்சிப் பகுதியின் முதற் கூட்டம், வண்ணை சர். தியாகராயர் கல்லூரியில், தலைமை ஆசிரியர் அ. ஞானசுந்தரனார் தலைமையில், 6—11—54 மாலை 6 மணிக்கு நடைபெற்றது. 'நாடும் மொழியும்' எனும் பொருள் குறித்து, தோழர்கள் சொக்கலிங்கம், அறவாழி, தேவராசன் ஆகியோர் பேசினர்.

### 'அறிவியக்க மன்றம்' துவக்கம்

சென்னை—அமைந்தகரையில் தோழர் அ. பாண்டியன் தலைமையில் மேற்படி மன்றம் திறக்கப்பட்டு, அம்மன்றத்தில், இலவச இரவுப் பள்ளி ஒன்றும் நிறுவப்பட்டது. பின்னர் மன்ற நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— தலைவர்: அ. பாண்டியன்; செயலாளர்: செ. கதிரவன் ; துணைச் செயலாளர்: இரா. பா. சாரதி; பொருளாளர்: கி. கண்ணப்பன்.

### மாணவர் மன்ற உறுப்பினர் பொதுக் கூட்டம்

7—11—54 பிற்பகல் 3 மணிக்கு மேல் மன்ற நிலயத்தில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் மயிலை சிவமுத்து அவர்கள் உறுப்பினர் அனைவரையும் வரவேற்று மாணவர் மன்றம் கடந்த 22 ஆண்டுகளாக மாணவர்களுக்கு ஆற்றி வரும் அரிய தொண்டுகளைக் குறித்தும், இனிமேல் ஆற்ற இருக்கும் செயல்களையும் விளக்கிக் கூறிய பின், டாக்டர் எஸ். தருமாம்பாள் அவர்கள், மாணவர் மன்றத்திற்குச் சொந்தமாக நிலயம் ஒன்றினை ஏற்படுத்தத் தம்மாலான உதவியைச் செய்வதாக உறுதி கூறினர்கள். பின்னர் மன்ற வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது.

### சபாநாயகர் மாணவர் இல்லம்

14—11—54ல், சென்னை, இராயபுரத்திலுள்ள சபாநாயகர் சிவசண்முகம் பிள்ளை மாணவர் இல்லத்திற்கு, சென்னை மேயர் திரு. ஆர். முனுசாமி பிள்ளை அவர்கள் வருகை தந்து, மாணவர் இல்லத்தின் நடைமுறைகளைப்பார்வையிட்டு, அவ்விடுதிக்காக, ஒவ்வொருவரும் தம்மாலான உதவிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். பெங்களூரைச் சேர்ந்த வி. எஸ். நாச்சிமுத்து (செட்டியார்), அவ்விடுதிக்காக ரூ. 200 நன்கொடையளித்ததோடு மேலும் உதவுவதாகவும் கூறினர்.

### நடிப்புப் புலவர் நாடகக் கழகத் துவக்கம்

14—11—54 காலை 10 மணிக்கு சென்னை எழு கிணறு, பரமானந்த முதலி தெரு, 4-ம் எண்ணுள்ள இல்லத்தில், தோழர் நாரண துரைக்கண்ணன் தலைமையிலும், சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் கே. எம். கண்ணபிரான் முன்னிலையிலும் மேற்படி நாடகக் கழகத்தின் திறப்பு விழாவும், தோழர் ஏ. எஸ். வேணு அவர்களின் 'சக்கரவர்த்தி திருமகன்' என்ற நாடகத் துவக்க விழாவும் நடைபெற்றது. தலைவர் தமது உரையில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணுதுரை அவர்கள், அரசியலில் மட்டுமல்லாமல், நாடகத் துறையிலும் ஒரு மறுமலர்ச்சியை உண்டு பண்ணி, நாட்டு மக்களின் அறியாமையை விரட்ட அதை ஒரு ஆயுதமாக அமைத்துத் தந்திருக்கும் அவரது பெரும் பணியினைக் குறிப்பிட்டுவிட்டு, அவரைப் பின்பற்றிச் செல்வோர் நல்ல கருத்துக்களடங்கிய நாடகங்களை நடித்துக்காட்டி, நாட்டு மக்களின் அறியாமைப் பிணியினைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

பின்னர், தோழர்கள் ஏ. எஸ். வேணு, மு. வரதராசன் ஆகியோர் சிறிது நேரம் பேசியதும் தோழியர் டி. டி. அம்சவேணியும், எம். கே. லலிதகுமாரியும் இயக்கப் பாடல்களைப் பாடினர்.

### கலை வளர் கழகம்

1—11—54-ல், சென்னை, மண்ணடி பாரிஸ் வெங்கடாசல அய்யர் தெரு, 36-ம் எண்ணுள்ள இல்லத்தில் தோழர் இரா. இளஞ்செழியன் தலைமையில் "கலை வளர் கழகம்" நிறுவப்பட்டது. தோழர் இரா. க. முருகன் செயலாளராகவும், ஜே. இமயவரம்பன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### சென்னை மாநில மீனவர் ஐக்கிய முன்னணி

14—11—54 காலை 10 மணியளவில் காசிபுரம் மீன் பிடிப்போர் சங்கக் கட்டிடத்தில், திரு. கே. குப்புராஜ் தலைமையில் நடைபெற்ற கமிட்டிக் கூட்டத்தில், மேற்படி ஐக்கிய முன்னணியின் தலைவர் தோழர் என். ஜீவரத்தினம் டில்லியில் இருந்து வரும்போது சென்னை ரயில் நிலயத்தில் வரவேற்று ஊர்வலமாக காசிபுரத்திற்கு அழைத்து வந்து அங்கு ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதெனவும், 'பிஷர்மென்' என்ற ஆங்கில பதத்திற்கு சில தமிழ் பத்திரிகையாளர்கள் 'பரதவர்' என்று தமிழ் பொருள் தந்து பத்திரிகைகளில் பிரசுரிப்பதை வன்மையாகக் கண்டித்தும், 'மீன் பிடிப்போர்' என்று தமிழில் பிரசுரிக்கவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேறின.

### வட சென்னைக்குப் பஸ் வசதி

18—11—54 மாலை, தோழர் ப. ஜீவானந்தம், எம். எல். ஏ., தலைமையில், தோழர்கள் முருகேசன், பாபு, ஆர். கணேசன், பானபாஸ் ஆகியோரடங்கிய தூதுக் குழு ஒன்று சென்னை போக்குவரத்து அமைச்சர் பரமேஸ்வரனைப் பேட்டி கண்டு, வடசென்னையிலுள்ள போக்குவரத்து வசதிக் குறைவை நீக்க, 6 'ஏ' பஸ் போக்குவரத்துமார்க்கத்தில்மேலும் அதிக பஸ்கள் விடவேண்டுமென்றும், சட்டக் கல்லூரியிலிருந்து பிராட்வே வழியாக, தொண்டையார்பேட்டைக்குப் புதிய பஸ் மார்க்கம் (ரூட்) ஏற்படுத்த வேண்டுமென்றும் கோரி, 1,045 பேர்களது கையொப்பமடங்கிய மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தனர். விரைவில் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதிமொழி கூறியுள்ளார்.

### தாழ்த்தப்பட்டோர் சீர்திருத்தச் சங்கம்

3—11—54ல், சென்னை பந்தர் ராமா நாய்க்கன் தோட்டத்தில், தோழர் எஸ். வீரபத்திரன் தலைமையில் மேற்படி சங்கம் நிறுவப்பட்டு, முறையே தலைவர்களாக எஸ். நடேசன், ஈ. எல். ஆர். ஜீவரத்தினமும், செயலாளர்களாக எஸ். பரமசிவன், எஸ். துளிர்க்காணம், வேலாயுதமும், பொருளாளராக எஸ். வீரபத்திரனும், 21 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### சென்னை முத்தமிழ் மன்றம்

14—11—54 காலை 10 மணிக்கு தோழர் முத்தமிழ்மணி தலைமையில் நடைபெற்ற மன்ற பொதுக் குழுக் கூட்டத்தில், மன்ற வரவு—செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், 5—12—54-ல் ஓர் பொதுக் கூட்டம் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

### பொத்தனூர் வெற்றிலைத் தொழிலாளர் சங்கம்

15—11—54 இரவு 9 மணிக்கு, மேற்படி சங்கத்தின் செயற்குழுக் கூட்டம், ஓ. எம். கந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது, வெற்றிலைக் கொடிக்காலுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைத் தவிர்க்க சென்னை மாநில மாநாடொன்று வேலூரில் டிசம்பர் கடைசி வாரத்தில் நடத்துவதெனவும், தோழர் பொன்னு ஆர். ரங்கசாமி எம். எல். ஏ., அவர்களைத் தலைவராகக் கொண்ட வரவேற்புக் குழு ஒன்று அமைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

### புது கும்மிடிப்பூண்டி அண்ணா இரவுப் பள்ளி

இவ்வூர் தி. மு. கழக ஆதரவில், 1—11—54ல், மேற்படி பள்ளி துவங்கப்பட்டது. கல்லாதவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுக்கப்படுகிறது.

# கைத்தறி நெசவுத் தொழில் பற்றிய கனுங்கோ குழு அறிக்கை

## அமுல் நடத்தக் கூடாதென தீர்மானம்

### நெசவாளர் 'கார்ப்பரேஷன்' அமைக்க உத்தேசம்

### தமிழ்நாடு கைத்தறியாளர் மாநாட்டு முடிவுகள்

நெசவாளர் பிரச்சினை பற்றி ஆராய நியமிக்கப்பட்ட நித்தியானந்தா கனுங்கோ கமிட்டியின் அறிக்கையைக் கண்டித்து, சேலம் வெண்ணந்தூரில் கூடிய நாலாவது கைத்தறி நெசவாளர் காங்கிரசில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மாநாட்டிற்கு சென்னை திரு. ஆர். கோவிந்தசாமி தலைமை தாங்கினர்.

நிறைவேறிய தீர்மானங்களின் சுருக்கமாவது :—

நித்தியானந்தா கனுங்கோ விசாரணைக் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை, நெசவாளர்களுக்கு விரோதமானதாக இருக்கிறது.

அந்த அறிக்கையின்படி, கைத்தறிகளை விசைத் தறிகளாக மாற்றினால் பல நெசவாளர்களுக்கு வேலை கிடைக்காமற் போகும்.

தவிர இந்தியாவில் மொத்தம் 23 லட்சம் கைத்தறிகள் இருக்கையில் 15 லட்சம் தறிகள் மட்டுமே இருப்பதாகவும், ஒரு தறி, நான்கு பேர்களுக்கு வேலை கொடுத்து வருகையில் தறி $1\frac{1}{2}$ பேருக்கு மட்டுமே வேலை தருவதாக, அறிக்கையில் கனுங்கோ குழு கூறியிருக்கிறது. எனவே தவறுகள் பல நிறைந்த அந்த அறிக்கையை அமுல் நடத்தக் கூடாதென மாநில மத்திய அரசாங்கங்களை வற்புறுத்துகிறோம்.

நெசவாளிகள் எல்லோருக்கும் வேலை கிடைக்கவும் நெசவாளர்கள் பங்கு ஒன்றுக்கு ரூ. 10 வீதமும், 'மாஸ்டர் வீவர்'களும் வியாபாரிகளும் பங்கு ஒன்றுக்கு ரூ. 100 — வீதமும் கொடுத்து தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் 'கார்ப்பரேஷன் லிமிடெட்' என்ற ஒரு நிறுவனம் ரூ. 5 லட்சம் மூலதனத்துடன் ஆரம்பிக்கலாமென்றும், உற்பத்தி முகாம்கள், சேலம், மதுரை, திருச்சியிலும் ஆரம்பிக்க வேண்டும் என்றும், மத்திய அலுவலகம் சென்னையில் நிறுவுவதுடன் அரசாங்கம் பணம் கடனாகத் தந்து உதவ வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக, ஒரு குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

### மதுரை அழகிரி நினைவுப் படிப்பகம்

7—11—54 காலை 11 மணி அளவில் தோழர் வ. திருமாறன் தலைமையில் நடைபெற்ற திராவிட மறுமலர்ச்சி மன்றம்—அழகிரி நினைவுப் படிப்பக உறுப்பினர் கூட்டத்தில், செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர் : அ. தர்மர் ; துணைச் செயலாளர் : சி. குருசாமி ; பொருளாளர் : வ. திருமாறன் ; விளம்பர உறுப்பினர்களாக நான்கு பேரும், நகர கழகப் பிரதிநிதிகளாக இரண்டு பேரும், 12 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### உறையூர் (திருச்சி) சங்கரன் படிப்பகம்

14—11—54 காலை 10 மணியளவில் தோழர் எம். எஸ். மணி தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில், தோழர் எம். எஸ். மணி அவர்கள் அவ்வப்போது நடந்த கூட்டங்களின் அறிக்கைகளை பார்வையிட்டபின், படிப்பகத்தின் சார்பாக பொங்கல் விழா நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

### பொன்மலை திருக்குறள் கழகம்

7—11—54 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு இக்கழகத்தின் 7-வது திங்கள் விழா, இரயில்வே படிப்பகத்தில் சுவீடன் நாட்டுத் தமிழ்ப் பேரறிஞர் திரு. பிரிக்வோம் தலைமையில் நடைபெற்றது. 'வெள்ளையர் கண்ட திருக்குறள்' என்னும் பொருள் குறித்து அவர் சொற்பொழிவாற்றினர். திரளான மக்கள் கூடி, அந்த ஆங்கிலேயரின் தமிழ்ப் புலமையைக் கண்டு வியந்தனர்.

"திருக்குறள் எவ்வாறு உலகப் பொது நூலாய் மிளிர்கிறது; எவ்வாறு முயன்று பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது; திருவள்ளுவர் கூறும் ஒழுக்க முறைகள், தமிழ் மொழியின் சிறப்பு," ஆகியவற்றை விளக்கி, அவர் சொற்பொழிவாற்றினர்.

### கொமரலிங்கத்தில் தி. மு. கழக பொதுக் கூட்டம்

31—10—54ல், இவ்வூரில், தோழர் கே. எஸ். நவநீதம் தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் கே. ஏ. மதியழகன், ப. நாராயணன், வெ. காளியப்பன், இரா. தங்கவேல், கணபதி மற்றும் பலரும் தற்கால அரசியல் நிலை குறித்தும், கல்லக்குடி போராட்ட வெற்றி பற்றியும் பேசினர்.

### மதுரை தி. மு. கழகம்

8—11—54ல், மதுரை திலகர் திடலில், தோழர் மைனர் மோசஸ் தலைமையில் நடைபெற்ற மாணவர் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் இளமாறன், மா. பாண்டியன், கு. கிருஷ்ணன் (இந்திரசித்து) ஆகியோர் பேசியதும், நகர தி. மு. க. செயலாளர் எஸ். முத்து அவர்கள் மாணவர்களைப் பாராட்டிப் பேசிய பின், தோழர் கண்ணதாசன் மாணவர்கள் கடமை பற்றியும், இன்றைய அரசியல் நிலை பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

### நெல்லிக்குப்பம் ஆலைத் — தொழிற் சங்கத் தேர்தல்

18—11—54ல் நடைபெற்ற மேற்படி சங்கத் தேர்தலின்போது, தலைவர் தேர்தலில் தோழர் குருசாமி அவர்கள், தமக்கு எதிராகப் போட்டியிட்ட தோழர் கே. டி. கே. தங்கமணியைக் காட்டிலும் 210 ஓட்டுக்கள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார். மேலும், துணைத் தலைவராக தோழர் வெங்குப்பிள்ளையும், செயலாளராக தோழர் சிவசுப்பிரமணியமும், துணைச் செயலாளராகத் தோழர் சி. பாலவேலாயுதமும் (தி. மு. க.) பொருளாளராக தோழர் அழகப்பனும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின், 16-பேர்கள் நிர்வாக உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### பம்பாய் — மணிபுரம் முத்தமிழ் மன்றம்

9—11—54ல், தாராவி, காந்தாரியா கட்டிடத்தில், முத்தமிழ் மன்றத்தின் பம்பாய் கிளை நிறுவப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—தலைவர் : த. இ. ராஜா; செயலாளர் : சு. தங்கவேலன் ; பொருளாளர் : சு. சொக்கலிங்கம்.

### பிறப்பு

16—11—54 காலை 8 மணிக்கு சென்னை, மண்ணடி, சவுரிமுத்து தெரு, எண் 32-ல், தோழர் டி. வேணுகோபால் வாழ்க்கைத் துணைவி தோழியர் பி. சக்குபாய் ஓர் பெண் குழந்தைக்குத் தாயாரானர். தாயும், சேயும் நலம்.

# சிவில் ஊழியர்கள் அரசியலில் கலந்துகொள்ளலாம்

## சிங்கப்பூர் சர்க்கார் அனுமதி தருகிறது

சிங்கப்பூர் சர்க்கார் காரியாலயங்களில் வேலை பார்க்கும் 14,000 சர்க்கார் ஊழியர்கள் அரசியல் இயக்கங்களில் கலந்துகொள்ளலாம் என்று சர்க்கார் அனுமதித் திருக்கிறது.

சிங்கப்பூர் சர்க்கார் காரியாலயங்களில் மொத்தம் 20,000 பேர் வேலை பார்க்கிறார்களாம்.

அரசியலில் கலந்துகொள்ள அனுமதி கொடுக்கப்பட்டுள்ள இவர்கள் எல்லாம் தினக்கூலி வாங்குவோர் என்று தெரிகிறது.

சர்க்கார் ஊழியர்களில் மூன்றாவது, நான்காவது பிரிவினைச் சேர்ந்த இவர்கள் சுமார் 57 வகைப்பட்ட ஊழியர்கள் என்று சொல்லப்படுகிறது.

டைபிஸ்டுகள், மொழியாசிரியர்கள், ரெவின்யூ அதிகாரிகள், சிறை அதிகாரிகள், நீதிமன்ற ஊழியர்கள், பாதுகாப்பு இலாகாவினர் ஆகியோர் இப்புதிய உத்திரவின் மூலம் அரசியலில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். இவர்களைத் தவிர மற்றவர்கள் அனைவரும் அரசியல் இயக்கங்களில் சேரலாம்; அந்த இயக்கங்களுக்கு ஆதரவு தேடலாம்; பொது மேடைகள், பத்திரிகைகள், வானொலி இவை மூலம் அரசியல் பிரச்சாரம் செய்யலாம் என்று அனுமதிக்கப்பட்டிருப்பதுடன், சட்டசபை, நகரசபை ஆகியவைகளுக்குப் போட்டியிடலாம் என்றும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், இந்த சிவில் ஊழியர்கள், சர்க்கார் உடையுடன் எந்தப் பிரச்சாரமும் செய்வது கூடாது. சர்க்கார் காரியாலயங்களில் பிரச்சாரம் செய்வதும் கூடாது என்று தடுக்கப்பட்டிருக்கிறது.

தாங்கள் வேலை செய்வதால் கிடைக்கும் செய்திகளைப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளக்கூடாது என்று உத்திரவிடப்பட்டிருக்கிறதாம்.

## ஆசைத்தம்பி.....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தனது இலங்கை சுற்றுப் பயணத்தின்போது தோழர் ஆசைத்தம்பி கொழும்பு தி. மு. கழகக் கிளைகளின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் சொற்பொழிவாற்றினார். கூட்டத்திற்கு தோழர் பி. தம்பிதுரை தலைமை வகித்தார்.

கூட்டம் நடைபெற்ற நாராயண குரு மண்டபத்திற்கு உள்ளேயும் வெளியிலும் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர்.

துவக்கத்தில் இலங்கை தி. மு. க. செயலாளர் இரா. அதி. மணி அனைவரையும் வரவேற்றார்.

தோழர் டி. இராசன் சொற்பொழிவாற்றிய பின்னர், தோழர் என். கதிரவன் பேசத் துவங்கினார்.

கூட்டம் ஏராளமாக இருந்தும், தொண்டர்கள் நல்ல முறையில் அமைதியை நிலைநாட்டி வந்தனர்.

தோழர் கதிரவன் பேசுகையில், யாரோ சிலர், மேடைமீது கை வெடி குண்டு ஒன்றை வீசினர்.

அது வெடித்ததும், மக்கள் சிலர் வெளியேறினர்.

அதே நேரத்தில், மண்டபத்திற்கு வெளியில் இருந்த மக்கள் மீதும் ஒரு வெடிகுண்டு வீசப்பட்டது. பல காலிகள், கல் எறிந்தனர்; இதனால் பலர் காயமடைந்தனராம்; இருவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டதென்றும் கூறப்படுகிறது.

இதற்குள் போலீசார் வந்து சேர்ந்தனர். போலீசாரைக் கண்டதும் காலிகள் ஓட்டம் பிடித்தனராம்!

போலீசார் ஒருவரைக் கைது செய்து, போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். இவர் இலங்கை கம்யூனிஸ்டு கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவர் என்று சொல்லப்படுகிறது.

இரண்டு கை வெடிகுண்டுகள் வீசப்பட்டபோதும், ஒரு சிலர் பீதி அடைந்ததைத் தவிர, கூட்டத்தினர் அமைதியாகவே இருந்தனர்.

கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

தோழர் ஆசைத்தம்பி சொற்பொழிவாற்றுகையில், எதிர்ப்புகளுக்கு தி. மு. கழகம் அஞ்சாது என்றும், இதுபோன்ற இழி செய்கைகளால் தி. மு. கழக வளர்ச்சி தடைபடாது, என்றும் குறிப்பிட்டார்.

## 'சிவகாமியின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள், பேராசிரியர்கள், பொதுமக்கள் எல்லோரும் எவ்வித வேற்றுமையும் இன்றி, கண்டனக் குரல் எழுப்ப வேண்டும்.

"சென்னை பிரதேச விழாவிலே தேர்ந்தெடுக்கப்பட்ட நாடகம், எங்கள் தமிழ் நாடகக் கலையின் உயர்வை உண்மையாய் அறிவிப்பதல்ல; பிரதேச நாடக விழாவில், தமிழ் மக்களின் அபிமானம் பெற்ற கலைஞர்கள் எவருமே கலந்துகொள்ள முடியாமல், எதேச்சாதிகாரமாக நடத்தப்பட்டது; இந்த முடிவை நாங்கள் கண்டிக்கிறோம்,'

என்று தீர்மானம் நிறைவேற்றி, பொதுச்செயலாளர், சங்கீத நாடக அகாடமி, 9, குவீன்ஸ் வே, புது டில்லி என்ற முகவரிக்கும்,சென்னை சர்க்காருக்கும் அனுப்பிவைத்து தமிழ் நாட்டின் மானத்தைக் காப்பாற்றுமாறு வேண்டுகின்றோம்."

## சென்னையில் பால் பண்ணை

### ரூ. 12 லட்சம் செலவில் அமையும்

#### நகர சபை அதிகாரி தகவல்

சென்னை எருக்கஞ்சேரியில் ரூ. 12 லட்சம் செலவில் ஒரு பால் பண்ணை ஆரம்பிக்கும் திட்டத்திற்கு சென்னை நகர சபை அனுமதி தந்திருப்பதாகவும், நகரிலுள்ள கறவைப் பசுக்கள் — முக்கியமாக வட சென்னையிலிருக்கும் பசுக்கள் இப்புதிய பண்ணைக்கு கொண்டு செல்ல திட்டமிட்டிருப்பதாகவும், சென்னை நகர சபை கமிஷனர் சுப்பராயன் வட சென்னையில் நகரின் ஒரு மிருக வைத்தியசாலையின் திறப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அரும்பாக்கத்தில் ரூ. 3 லட்சம் செலவில் ஒரு பால் பண்ட தொழிற்சாலையை ஆரம்பிக்கவும் திட்டமிட்டிருப்பது பற்றிய தகவலும் வெளியிட்டுள்ளார்.

## வெளிநாட்டுக் கப்பல்களுக்கு தடை!

பம்பாய், நவ 21—

இந்தியக் கடலோரப் போக்குவரத்தில் அன்னியக் கப்பல்களை வருகிற 1955 ஏப்ரல் முதல் அனுமதிக்கக் கூடாதென, இந்திய கப்பல் சொந்தக்காரர்களின் ஆலோசனைக் குழு மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்துள்ளதாம்.

சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய துறைமுகங்களில் தொழிலாளர் பிரச்னைக்குச் சீக்கிரமே பரிகாரம் தேடவேண்டும் என்று குழு குறிப்பிட்டுள்ளது எனவும் தெரியவருகிறது.

# தென்னாட்டில் குடிசைத் தொழில்

## வளர்ச்சியடைய வடவர் தரும் கடன்

சிறு தொழில் வளர்ச்சிக்கும், குடிசைத் தொழில்களுக்கும் கடன் கொடுத்து உதவும் பொருட்டு, பல மாநில அரசாங்கங்களுக்கும் இந்தியப் பேரரசு மானியம், கடன் தொகைகள் ஒதுக்கியுள்ளது.

கடனாக மட்டும் ரூ. 19,60,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இத்தொகையில் சென்னைக்கு ரூ. 3,40,000 மட்டும் கடனாகக் கிடைக்கும்; ஷோரனூரில் உள்ள 'மெட்டல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்' நிறுவனத்திற்கு கடன் தருவதற்காக, சென்னை அரசாங்கத்திற்கு மத்திய சர்க்காரம் மேலும் ஒரு லட்சம் ரூபாய் கடன் தருமாம்.

திரு—கொச்சி மாநிலத்திற்குக் கடனாக ரூ. 5 லட்சமும், ஆந்திராவுக்கு மானியமாக 18,900 ரூபாயும் கிடைக்குமெனத் தெரிகிறது.

ஆந்திரா தனக்குக் கிடைக்கும் மானியத் தொகையை, கண்ணாடி வளையல் தயாரிப்புப் பயிற்சி நிலையங்களை அமைக்க உபயோகிக்குமாம்.

# திராவிட நெசவுத் தொழில்

## வடவர் பாராட்டு

சென்னை மாநிலத்தில் நெய்யப்படுகிற துணியின் தரமும், நயமும் மிகச் சிறப்பாயிருப்பதாக, உத்திரப் பிரதேச மேல் சபை உறுப்பினரும், புதிய கைத்தறி போர்டின் அங்கத்தினருமான நவாப் சையத் அலிஸாஸ் நகுல் பாராட்டியிருக்கிறார்.

தென்னாட்டில் கைத்தறி நெசவுத் தொழில் எப்படி நடைபெறுகிறது என்பதை ஆராய வந்துள்ள மூவர் கொண்ட குழுவின் தலைவரும் அவர்தான்.

## காரைக்கால் கட்டுப்பாடுகள் குறித்துத் தந்தி

இந்தியப் பேரரசுடன் கடந்த நவம்பர் 1-ல் இணைக்கப்பட்ட காரைக்கால் பகுதிக்கும்—இந்திய யூனியனுக்கும் இடையில் கட்டுப்பாடின்றி பிரயாணம் செய்ய அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டு குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத், பிரதமர் நேரு ஆகியோருக்கு, மக்களால், காரைக்காலிலிருந்து தந்தி ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

# தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

(தொடர்ச்சி)

| | |
|---|---|
| வேப்பலோடை அ. கு. அ. திருமலையப்பன் | 2—0—0 |
| குன்னூர் குகன் மூலம் | 4—3—6 |
| ஆமதாபாத் தி. மு. கழகம்— | |
| தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் மூலம் | 100—0—0 |
| ஆமதாபாத் நடராசன் நாடக மன்றம் (சி. பி. சிற்றரசு மூலம்) | 78—8—0 |
| செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் சார்பில் தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்களால் காஞ்சிப் பொதுக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் வசம் | 1,957-12—1 |
| சிங்கப்பூர் தோழர்கள் திரு. கே. வீர பூரணம் அவர்கள் மூலம் | 153-13—3 |

# "தனித் தனி மாநிலங்கள் ஏன்? மொழிவழி ஆட்சிகள் ஏன்?"

## "ஒரே மத்திய ஆட்சியே போதுமானது!"

ஜனநாயகத்திற்கு 'புதுப் பொருள்' தரும் கோதண்டராவின் 'அரிய யோசனை'!

"மொழிவழிப் பிரிவினையோ, நிர்வாக சவுகரியம் கருதி மாநில வேலிகளை நிருத்தி அமைப்பதோ நல்லதல்ல;

"நல்ல முறை ஜனநாயகத்திற்கு, மாநிலத்திற்கு ஒரு சர்க்கார் விதம் இருப்பது அவசியமில்லை;

"வகுப்புவாதம், இனம், மொழி ஆகிய பற்றுகளுக்கு மக்கள் அடிமையாகி இருக்கும் நிலைமையில், மொழிவழி சர்க்கார் ஏற்பட்டால், அதன் மூலம் மொழிவாரி சுதந்திர உணர்வு மேலோங்கி தேச ஒற்றுமை பாதிக்கப்படும்;

"மத்திய அரசாங்கம் என்ற பெயரில் ஒரே சர்க்கார் ஆட்சி புரிந்தால் ஜனநாயக முறைக்கு பழுது ஏற்படாது,"

—என்று, இந்திய ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த திரு. பி. கோதண்டராவ் என்பவர், இந்திய மக்கள் சபையில், 'பார்லிமெண்டரி' குழுவில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த 'அரிய யோசனை'யை வெளியிட்டுள்ள அந்த 'ஜனநாயகவாதி' மேலும் கூறுகிறார்:—

"இந்தியாவின் தேசீய ஐக்கியம் பாதுகாக்கப்படவேண்டுமானால், மொழிவழி மாநிலங்கள் கூடாது;

"தற்போதுள்ள மாநிலங்களைக் கூட ஒழித்துவிட்டு, மத்தியிலிருந்தே ஆட்சி புரியலாம்."

## ஜெனரல் நகீபுக்கு விசாரணை இல்லை

எகிப்தின் குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ஜெனரல் நகீபை சர்க்கார் விசாரணை செய்யமாட்டார்கள் என்று தெரிகிறது.

சூடான் சர்க்காரில் தொழில் அமைச்சரான சையத் முகமது நூர் தலைமையில் சூடானிய தூதுக்குழு ஒன்று ஜெனரல் நகீபின் பாதுகாப்பைக் கோரி எகிப்து சர்க்காரை வற்புறுத்த கெய்ரோ சென்றிருக்கிறதாம்.

இத்தூதுக் குழுவினர், எகிப்து சர்க்காருடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி நகீப் விசாரிக்கப்படமாட்டார் என்று அக்குழுவின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று தெரிவித்தது.

## லாரி போக்குவரத்து

லாரி போக்குவரத்தை தேசியமயமாக்குவதற்கு இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இடமில்லையெனவும், இந்தக் கோரிக்கையை 1961-ம் வருடம் வரை கவனிக்க இயலாதெனவும் திட்டக் குழு தெரிவித்திருப்பதாக மக்கள்-சபையில் உதவி மந்திரி ஓ. வி. அழகேசன் கேள்வி ஒன்றுக்குப் பதிலாகக் கூறினார்.

# அரசியல் ஊஞ்சலாட்டம்

## பிரகாசம் காங்கிரசில் தீவிரவாதியாகிறார்!

ஆந்திராவின் முன்னாள் முதல் அமைச்சர் பிரகாசம், தான் காங்கிரசில் சேர்ந்துவிட்டதாக அறிவித்திருக்கிறார்.

குண்டூரில் நடைபெற்ற ஆந்திரப் பிரதேச காங்கிரஸ் குழு கூட்டத்தில் இவர் கலந்துகொண்டார். இவருடன் கலந்துகொண்ட ரோக்கம் லக்ஷ்மிநரசிம்ம தோரா, வீரண்ண பதால் ஆகியோர் மீண்டும் காங்கிரசில் சேர்ந்திருக்கிறார்களாம்.

## மத்திய பீடத்தில் பண்டித பந்த்?

உத்திரப் பிரதேச முதல் அமைச்சர் பண்டித கோவிந்த வல்லப பந்த் இந்திய மந்திரி சபையில் சேர்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

66 வயதுடைய இவர், பண்டித நேரு தனது மந்திரி சபையைத் திருத்தி அமைக்கும்போது உள்நாட்டமைச்சராக சேர்த்துக் கொள்ளப்படுவார் என்று கூறப்படுகிறது.

## சிறப்புக்கூட்டம்

சென்னை 29, 30-வது வட்ட தி. மு. கழகக் கிளைகளின் நிதிக்காக கோகலே மண்டபத்தில் 21—11—54 ஞாயிறன்று, காலை 10 மணியளவில் சிறப்புக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. தோழர் என். வி. நடராசன் அவர்கள் தலைமை தாங்கி 'இன்றைய அரசியல் நிலை' குறித்து விளக்கிப் பேசினார்.

அடுத்து தோழர் வி. எஸ். கோவிந்தராசன் 'நாடகம்' பற்றி சிறிது நேரம் பேசியதும், தோழர் டி. கே. சீனிவாசன், 'பொதுவுடைமைப் பாதையில் நாம்' எனும் பொருள் குறித்து விரிவானதொரு சிறப்புரை நிகழ்த்தினார்.

இறுதியாக தோழர் க. அன்பழகன் அவர்கள், 'நான் கண்ட அண்ணா' எனும் தலைப்பில் விரிவுரை ஆற்றினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றிகூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது. (ந. கி.)

## கி. பாகிஸ்தானிலிருந்து

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஏற்கனவே வெளியிடப்பெற்றுள்ள அட்டவணைக் குறிப்பின் படிதான் நஷ்ட ஈடு வழங்கப்படுமெனவும், எந்த அகதிக்கும் ரூ. 50 ஆயிரத்துக்கு மேல் நஷ்டஈடு தரப்படமாட்டாதெனவும் மந்திரி பார் அறிவித்துள்ளார்.

இப்போது அரசாங்கத்தின் கைவசமுள்ள அகதிகள் சொத்தான வீடு, நிலம் போன்ற 'அசையா'ச் சொத்துக்களை சர்க்கார் ஏலம் போடாது; ஏனெனில் இப்போதுள்ள சமூகமான நிலையை அரசாங்கம் குலைக்க விரும்பவில்லை என்றும் அவர் கூறுகிறார்.

சொத்துக்கள், நியாயமான மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்ட பின் அகதிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுமாம்.

ஆதரவற்ற விதவைகளாயிருக்கும், அகதிகளுக்கு ரூ. 1,800 தரப்படுமாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம். ஏ.